24.10.2024 ம.சா1 பீர்முகம்மது Mcop 260/2021

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2 மற்றும் 4ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எலும்பு மில் வைத்துள்ளேன். விபத்தில் சம்பந்தப்பட்ட டி.என்.76.ஏசி.8170 என்ற வாகனம் 3ம்எதிர்மனுதாரர் வாகனம் என்றால் சரியல்ல. என்னுடைய வாகனம் ஆகும். மேற்படி வாகனம் 3ம் எதிர்மனுதாரர் செய்யது அலி என் பெயரில் 4ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனம் என் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட கொஞ்சநாட்களில் விபத்து ஏற்பட்டது. மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு சான்று படி 2015ம் ஆண்டுதான் வாகனம்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனத்தை என்னுடைய ஓட்டுனர் ஆஷிக் ரசூல் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்தின் போது ஆஷிக் ரசூல் ஓட்டும்போது முனியசாமி, ஷாப்சாகபுதின் ஆகியோர்கள் வாகனத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய வாகன சேதாரத்திற்கு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகனம் சேதாரம் குறித்து 2 மற்றும் 4எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாகனத்தை ஆய்வு செய்ய சர்வேயர் மூலம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வேயர் நியமனம் செய்ய கோரிய மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகனம் 3ம்எதிர்மனுதாரர்பெயரில் 4ம்எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதால் வாகனம் பெயர் மாற்றம் முறையாக பதிவு சான்று மற்றும் காப்பீடு சான்றிதழையும் மோ.வாகன சட்ட பிரிவு 157ன் கீழ் 14நாட்களுக்குள் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2மற்றும் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு சான்று எண்.0918823116பி107464834 படி 6.9.2014ம் தேதி மேற்படி வாகனத்தின்

காப்பீடு வாகன மதிப்பு ரூ.4,10,947/-என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ரூ.4,10,947/-காப்பீடு செய்யப்பட்டு வாகனத்தின் சேதம் ரூ.5லட்சம் என மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 28.5.17 முதல் 27.11.2017 வரை நான் வாகனத்தை இயக்கி இருந்தால் ரூ.1,50,000/-ம் வருமானம் வந்திருக்கும் என சொல்லியுள்ளதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 28.5.17ம் தேதி வாகனத்தில் இருந்த பொருட்கள் சேதாரத்திற்கு ரூ.50ஆயிரம் கோரியுள்ள நிலையில் அது சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் மேற்படி தொகை எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ9 வழக்கிற்காக போலியாக என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ8 குறித்த சிடியை தாக்கல் செய்யாததால் மேற்படி ஆவணம் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து வாகன சேதாரத்திற்காக நான் பில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. மோ.வாகன சட்ட விதிமீறல் காரணமாக காப்பீடு வாகன இருப்பிட வசதி போன்ற விதிமீறல் காரணமாகவும் 2 மற்றும் 4ம்எதிர்மனுதாரர் நிறுவனம் 1,3 எதிர்மனுதாரர்களை ஈட்டுறுதி செய்து எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. 2,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.